வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 22.01.2025 புதன்கிழமை | இதழ் : 22 | பக்கங்கள் : 12

# பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில்!

## சபையில் அறிவித்தது அநுர அரசு



கொழும்பு, ஜனவரி 22

புதிய சட்டம் நிறைவேற்றப்படும்வரை தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் பராமரிக்கப்படும் என அவைத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளு மன்றில் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச் சட்டம் என்பது அரசாங்கத்தின் விருப்பமோ கொள்கையோ அல்ல. புதிய சட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படும் வரை நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கப்படும். புதிய சட்டமொன்று நிறைவேற்றப்படும் வரை அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை உள்ளது.

அது தொடர்பாக நீதியமைச்சர் காரணிகளை முன்வைத்திருந்தார் அதே போல் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் விமான

11



# 3 முதலீட்டு வலயங்களை வடக்கில் நிறுவ ஏற்பாடு!

## உலக வங்கிக் குழுவிடம் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 22

வடக்கின் அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்தப் பட்டுள்ளதாகவும், வடக்கில் மூன்று முதலீட்டு வலயங் களை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் தெரிவித் தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும்

11

# சுமந்திரனை விசாரியுங்கள்!

## சபையில் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜன. 22


அரச பேச்சாளர் அல்லது புலனாய்வுப் பிரிவின் பேச்சாளர் போன்று ஊகத்தின் அடிப்படை யில் என் தொடர்பில் கருத்து ரைத்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் எனத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ஓர் சிறப்புரிமை மீறல் தொடர்பில் உரை யாற்றும்போதே சிறீதரன் எம்.பி. இதனைக் கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் சென்னையில் தமிழ்நாடு

11



# விமான நிலையத்தில் சிறிதரனுக்கு அநியாயம் இழைக்கப்பட்டுள்ளது!

## சபையில் ரவூப் ஹக்கீம் எம்.பி.

கொழும்பு, ஜன. 22

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு விமான நிலையத்தில் இடம்பெற்ற விடயம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு விமான நிலையத்தில் தடுக்கப்பட்ட

11

# நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்ய அரசு திட்டம்!

கொழும்பு, ஜன. 22

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்துள்ள உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்ய அரசாங்கம் திட்ட மிட்டுள்ளதாக நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும நேற்று பாராளுமன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இதன் மூலம், பொது மக்களின் நிதிச்சுமையை குறைக்கும் நோக்கில் கூடுதல் நிவாரண நடவடிக்கைகளை அமுல்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் சித்ரால் பெர்னாண்டோ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெளிவுபடுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் குடிமக்களுக்கு கணிசமான சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை

11

# பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் சேவை புரியும் சுகாதார திணைக்களம்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் பாராட்டு

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம்,ஜன. 22

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தம்மால் முடிந்தளவு சிறப்பான சேவையை மக்களுக்கு முன்னெடுத்து வருகின்றமைக்கு சுகாதாரத் திணைக் களத்தினருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சுகாதார சேவையினரின் நியாயமான கோரிக்கைகளுக்கு முடிய மானவரையில் விரைவாக தீர்வுகளைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழான மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள்

11

# அர்ச்சுனா எம்.பியை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஜன. 22

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை கைது செய்ய அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக பெப்ரவரி 3 ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்குமாறும் நீதிமன்றம் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

அநுராதபுரம் பகுதியில் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு

11

# செல்வம் எம்.பியின் கடவுச்சீட்டை ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு!

- குமார கோகுலன் -

வவுனியா, ஜன. 22

கடவுச் சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும், நீதிமன்ற அனுமதி பெற்றே வெளிநாடு செல்ல முடியும் எனவும் அனுராதபுரம் மேல் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அனுராதபுரம் நீதிமன்றத்தால் வழக்கு ஒன்று தொடர்பில் பிடியாணை

11

# கைதடி தோட்டக் கிணற்றில் சிசுவின் சடலம் நேற்று மீட்பு

## மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜன. 22

கைதடிப் பகுதியில் தோட்ட கிணறொன்றில் இருந்து தொப்புள் கொடியுடன் சிசுவின் சடலமொன்று மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சிசுவின் தாய் உட்பட மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதடி பகுதியில் உள்ள தோட்ட கிணறொன்றில் இருந்து நேற்று காலை தொப்புள் கொடியுடன் சிசுவொன்றின் சடலம்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களின் கோரிக்கைக்கு அமைவாகவே நான் செயல்படுவேன்

## இ. போ. ச. வடக்கு முகாமையாளர் திட்டவட்டம் இணைந்த பஸ் சேவை நடைமுறைக்கு வருமா?



யாழ்ப்பாணம்,ஜன.22

**எமது தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே நான் செயல்படுவேன். நடைமுறை பிரச்னைகள் அவர்களுக்குத் தான் தெரியும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய பிரதான முகாமையாளர் கந்தசாமி கேதீசன் தெரிவித்துள்ளார்.**

01. 02. 2025 இலிருந்து யாழ்ப்பாண நகரிலுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து இ. போ. சவும் தனியாரும் இணைந்து நெடுந்தூர சேவைகளை ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இணக்கம் வெளியிட்டனர் என ஆளுநர் செயலகம் அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்புக்கு பதில் வழங்கும் முகமாக, நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 17 ஆம் திகதியன்று ஆளுநரால் எமக்கு கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. நாங்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். அந்தக் கூட்டத்தில் எமது இலங்கை போக்குவரத்து சபையின் தலைவரின் கடிதத்துக்கு அமைய தூர சேவை பேருந்துகள், புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்திலிருந்து கடமையை ஆற்றுமாறு கேட்கப்பட்டது. இ. போ. ச. தலைவரின் அறிவுறுத்தலின் படிதான் நாங்கள் செயல்படுவோம் என்று நாங்கள் தெரிவித்தோம்.

குறித்த கூட்டத்தில் பேசப்பட்ட முக்கிய விடயங்களை தவிர்த்து ஏனைய விடயங்கள் வெளிக் கொணரப்பட்டிருந்தன.

எமது தலைவரின் கடிதத்தில், எல்லா மாவட்டத்துக்குமான இணைந்த நேர அட்டவணையை தயாரித்து, எமது பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பித்து புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்துக்குச் சென்று கடமையை ஆற்றும்படி தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் ஆளுநரிடம் இருக்கிறது.

இணைந்த நேர அட்டவணை ஒன்று முன்னாள் மாகாண சபை அமைச்சர் டெனீஸ்வரனால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிட்ட நிலையில் அதே செயல்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதில் பிழை என்று கூறி கடந்த ஆட்சியிலும் நாங்கள் மாகாண சபைக்கு சென்று அங்கு தயாரித்த இணைந்த நேர அட்டவணையும் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றது.

எமது தலைமைக் காரியாலய செயலாற்று முகாமையாளரின் ஒப்புதலின் அடிப்படையில் இணைந்த நேர அட்டவணை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போதும் தனியார் துறை தமது பேருந்து நிலையத்தில் இருந்தும், நாங்கள் எங்களது பேருந்து நிலையத்திலிருந்தும் தான் சேவையை புரிவோம்.

ஆளுநரின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களை தவிர்த்து, நீண்ட காலத்திட்டமாக ரயில் நிலையத்தில் பேருந்து நிலையம் கட்டித் தருவதாக பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி ரயில் நிலையத்தில் பேருந்து நிலையம் கட்டித் தந்தாலும், எமக்கும் தனியார் துறைக்கும் தனித்தனியாக பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். எங்களது தொழிலாளரின் ஒத்துழைப்பு இல்லாமல் எங்கேயும் செயலாற்ற நாங்கள் தயாரில்லை" - என்றார். (எ- 05)

# யாழ். கலாசார நிலையப் பெயர் மாற்றம் மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல்

## ஐங்கரநேசன் ஆதங்கம்


யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ்ப்பாண கலாசார நிலையம் திருவள்ளுவர் கலாசார நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் கலாசார பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்டதும் தனித்துவமிக்கதுமான யாழ்ப்பாணம் கலாசார நிலையம் 2023 பெப்ரவரி 01ஆம் திகதி மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது. திறப்புவிழாக் கல்வெட்டில் அழியாத எழுத்துகளால் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம் இது. ஆனால், மக்களுக்கு உரித்தாக்கப்பட்டு இரண்டு வருடங்கள்கூடக் கடக்காத நிலையில் அம்மக்களின் அபிப்பிராயங்கள் எதுவும் பெறப்படாது பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாண கலாசார நிலையம் யாழ். மாநகர சபைக்கு உரித்தான காணியில் இந்திய அரசின் நன்கொடையில் உருவானது. இதற்கான உடன்படிக்கையில் யாழ். கலாசார நிலையத்தை முகாமைத்துவம் செய்கின்ற குழுவில் யாழ் மாநகர சபையினதும் வட மாகாண சபையினதும் சார்பில் ஒவ்வொருவர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இரண்டு சபைகளினதும் கலந்தாலோசிப்புகளின்றி இப்பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளது.

கோட்டாபய அரசாங்கம் யாழ். கலாசார நிலையத்தின் பெயரை மாற்றுமாறு முன்னர் அழுத்தங்களைப் பிரயோகித்த போது மாநகர சபையின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இப்போது, இரு சபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் திடுதிப்பென்று நிகழ்ந்த இப்பெயர் மாற்றம் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை இந்தியா நாசுக்காக நிறைவேற்றிக் கொடுத்துள்ளது என்றே எண்ணவைத்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)



# வல்வெட்டித்துறையில் கரையொதுங்கிய மிதவை

வடமராட்சி,ஜன.22

வடமராட்சி பருத்தித்துறை ஆதிகோவிலடி கடற்கரையில் நேற்று மிதவை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்றால் குறித்த மிதவை கரையொதுங்கி யிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கரையொதுங்கிய மிதவையைப் பொது மக்கள் என பலர் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேபோன்ற மிதவைகள் அண்மையில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, சுண்டிக்குளம் போன்ற பகுதிகளில் கரையொதுங்கியிருந்தன.

அண்மைக்காலமாக வடமராட்சி கரையோரங்களில் மிதக்கும் கூடாரங்கள், மிதவைகள்,போன்றன கரையெதுங்கியமை குறிப்பிடத்தக்கது. (02)

# மக்கள் தொடர்பாடல் அலுவலகம் திறப்பு



யாழ்ப்பாணம்,ஜன.22

தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் பலாலி வீதி, கந்தர்மடத்தில் நேற்று முன்தினம் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ஜெ. றஜீவன், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ-02)

## விளக்குமாற்றுடன் ஆர்ப்பாட்டம்

கல்முனை, ஜன. 22

கல்முனை பெரிய நீலாவணையில் மற்றுமொரு மதுபான நிலையம் வேண்டாம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் விளக்குமாற்றுடன் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றலில் பெரிய நீலாவணை மக்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# மணல் கடத்தி வந்த டிப்பர் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

உரிய அனுமதிப் பத்திரமில்லாமல் கிளாலி பகுதியில் இருந்து வெள்ளை மணல் கடத்தி வந்த டிப்பர் ஒன்று நேற்றைய தினம் மடக்கிப் பிடிக்கப்பட்ட நிலையில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த டிப்பர் சட்டவிரோதமாக மணலை ஏற்றி வருவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சாரதி, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.01.2025 புதன்கிழமை
பிலவ வருடம், தை 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உங்களைத் திருத்துவது பற்றி சிந்தியுங்கள்


இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்கள் போன்றுதான் செயற்படுவதாக குறிப்பிட்டிருக்கின்றார் - இவ்வாறு அவர் கூறிக் கொண்டிருக்கும் போது, நாடாளுமன்றத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பிறிதொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரனோ, தனக்கு எதிராக இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் விசமப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் - தனக்கு நீதி வேண்டுமென்றும் - இது தொடர்பில் அரசாங்கம் அவரை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்றும் கூறியிருக்கின்றார். இது எதனை வெளிப்படுத்துகின்றது?

இலங்கை தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்தும் உள் மோதலில் சிக்கிக்கிடக்கும் நிலையில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் பரிகசிக்கத்தக்க வகையில் இருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் மக்கள் சார்பில் பேசக் கூடிய தார்மீகத் தகுதிநிலையை, அந்தக் கட்சி பெருமளவில் இழந்து விட்டதாகவே தெரிகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மாற்றுக் கட்சிகள் பலவீனமாகவும், பொருத்தமான தேர்தல் வியூகமற்றிருந்தமையினாலேயே, இலங்கை தமிழ் அரசு கட்சி ஒப்பீட்டடிப்படையில் அதிக ஆசனங்களை வெற்றிகொள்ள முடிந்தது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஏனைய கட்சிகள் மிகவும் பலவீனமாக இருந்தமையினாலும், தமிழ் பிரதிநித்துவம் பறிபோய்விடக் கூடாது என்னும் இயல்பான கரிசனையினாலுமே, அதிக ஆசனங்களை தமிழ் அரசுக் கட்சி தன்வசப்படுத்திக் கொண்டது.

இந்த நிலையில் கட்சியின் தலைமையிலும் தற்காலிக மாற்றங்களை தமிழ் அரசுக் கட்சியினர் மேற்கொண்டிருந்தனர். ஆனால், தற்போதைய தலைவரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றல் இருப்பதாகவும் தெரியவில்லை. அரசாங்கத்துடன் தமிழ் மக்கள் சார்பில் பேசப் போவதாகக் கூறிக்கொண்டிருக்கும் ஒரு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரே தனக்கு எதிராக கட்சியிலுள்ளவர்கள் சதி செய்வதாக நாடாளுமன்றத்தில் கூறும் நிலைமை இருக்கின்றதாயின், தமிழ் அரசுக் கட்சியால் தமிழ் மக்களின் பிரச்னையை எவ்வாறு அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும்? சில விடயங்களில் எவ்வாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியும்?

அரசாங்கத்தை பெறுத்த வரையில் தேசிய இனப்பிரச்னை என்னுமடிப்படையில் பிரத்தியேக செயல்பாடுகளை அவர்கள் கொண்டிருக்கவில்லை. இது மிகவும் வெளிப்படையானது. இலங்கையர் என்னுமடிப்படையில் விடயங்களை கையாளுவது ஒன்றே, அரசாங்கத்தின் நோக்கமும் திட்டமுமாகும்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் ஆற்றல் இலங்கை தமிழ் அரசு கட்சியிடம் இருக்கின்றதா என்பதைத்தான் முதலில் அந்தக் கட்சியினர் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும். இதற்கு முதலில் தங்களின் தற்போதைய நிலை என்ன? தங்களால் முன்னோக்கி பயணிக்க முடியுமா? தங்களது உட்சண்டைகளுக்கு எவ்வாறு முடிவு கட்டுவது? இப்படியான கேள்விகளுக்கு முதலில் பதிலைத் தேடிக் கொண்டுதான் அரசாங்கம் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.



# அதிகாரம் படைத்தவர்களுடன் இறுதிவரை போராடிய விக்டன் ஐவன்

**கே.எஸ். இரத்தினவேல்**
*சட்டத்தரணி.*

இலங்கையின் புகழ்பூத்த சிரேஷ்ட புலனாய்வு ஊடகவியலாளரும் "ராவய" பத்திரிகையின் ஆசிரியருமான விக்டர் ஐவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமானார்.

எந்த விடயத்திலும் தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காத விக்டர் ஐவன் , அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களுக்கு மட்டுமின்றி, பழைமைப்போக்கில் திளைத்திருந்த நீதித்துறைக்கும், பிரதம நீதியரசர் - சட்டமா அதிபராகப் பதவி வகித்த சரத் என். சில்வா போன்றோருக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். சரத் என். சில்வாவின் பதவிக் காலம் நீதித்துறையின் இருள் படர்ந்த சகாப்தமாயிருந்தபோதிலும், சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் சிரேஷ்ட சட்டத்தரணிகளும் அதிகாரவர்க்கத்துக்கு அடிபணியும் நிலையிலேயே இருந்தார்கள். Desmond Fernando PC, D.W.Abeykoon PC போன்ற வழக்கறிஞர்கள் இதற்கு விதிவிலக்காக சட்டத்துறையின் சுயாதீனத்துக்கு குரல் கொடுத்திருந்தார்கள். இச்சந்தர்ப்பத்தில நீதித்துறையைத் தட்டிக்கேட்கும் வண்ணம் பல நூல்களை விக்டர் ஐவன் பிரசுரம் செய்திருந்தார். இவரது துணிகரமான கருத்துகளுக்கு ராவய பப்ளிகேஷன்ஸ் பெரிதும் துணை புரிந்தது. நீதித்துறையின் பல பெரும் குறைபாடுகளை தகுந்த ஆதாரங்களுடன் விக்டர் ஐவன் பகிரங்கமாக முன்வைத்த போதிலும்ம், அக்காலத்து நீதிக்கட்டமைப்பு எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருந்தது துரதிர்ஷ்டமே.

2002ம் ஆண்டளவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடை யில் ஏற்பட்டிருந்த போர்நிறுத்த உடன்படிக்கைக்கு தனது முழு ஆதரவினை நல்கியிருந்ததுடன் தனது பத்திரிகை மூலமாக பிரசாரத்திலும் ஈடுபட்டிருந்தார்.


தன் வாழ்நாள் முழுக்க ஊடக சுதந்திரத்திற்குப் பாடுபட்டிருந்த விக்டருக்கு எதிராக குற்றவியல் அவதூறு வழக்குகள் Criminal Defamation எண்ணிக்கையில் பன்னிரண்டு வழக்குகளை அரசாங்கம் ஏவிவிட்டிருந்தது. அவ்வழக்குகளை துணிவுடன் எதிர்கொண்டு வெற்றியடைந்தது மட்டுமின்றி, பொதுமக்கள் ஆதரவினைத் திரட்டி, குற்றவியல் சட்டத்தின் 480 ஆம் பிரிவான குற்றவியல் அவதூற்றினை முற்றும் முழுவதுமாக சட்டப் புத்தகத்திலிருந்து நீக்குவதற்கான நடவடிககைகளை மேற்கொண்டு மிகப்பெரிய வெற்றியும் ஈட்டினார். இக்காலகட்டம் சண்டே லீடர் லசந்த விக்ரமதுங்க, சண்டே ரைம்ஸ் சிங்ஹ ரட்ணதுங்க, தராகி சிவராம் போன்ற சுதந்திர ஊடகவியலாளர்கள் பிரபல்யம் பெற்றிருந்த பொற் காலம்.

ஊடகவியலாளர்களுக்கு எதிராக அரசயந்திரம் எடுக்கும் இன்னொரு ஆயுதம் Parliamentary Privilleges. இங்கும் விக்டருக்கெதிராக ஐந்து விசாரணைகள் முடுக்கிவிட்டிருந்தது அரசாங்கம். அதிலிருந்தும் சாம்பலிலிருந்து மீண்டெழுந்த பீனிக்ஸ் பறவைபோன்று மீண்டெழுந்தார் விக்டர்.


ஜே.வி.பி போராளியாக ஆரம்பித்த விக்டர் ஐவன், பல வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து, ஊடகப் போராளியாக மறுபிறவி எடுத்து, மக்களைச் சிந்திக்கவும், பயங்களைக் களைந்து போராடவும் தளம் அமைத்துக் கொடுத்தார்.

யாவற்றுக்கும் மேலாக, பொதுநலன்களைப் பாதிக்கும் சட்டங்களை துணிகரமாக எதிர்ப்பது எவ்வாறு என்று சட்டத்துறையினருக்கே பாடம்புகட்டியிருந்தார் விக்டர் ஐவன். இவ்வாறு எண்ணற்ற அக்கினிப் பரீட்சைகளையும், தடைகளையும், எரிமலைகளையும் எதிர்கொண்ட விக்டர் ஐவன் கொள்கைப்பற்றுடன் வாழ்ந்து, அதிகாரம் படைத்தவர்களுடன் எவ்வித சமரசத்திற்கு ஈடுபடாமல் இறுதிவரை போராடிய ஓர் மாபெரும் சக்தியாகத் தன்னை அடையாளம் காட்டிய மகத்தான மனிதர். விக்டர் ஐவனின் நினைவுகள் சுதந்திர உணர்வுகள் உள்ள மக்கள் அனைவர் மனதிலும் நீக்கமற நிலைத்து நிற்கும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். தாயாரின் உடல் நலம் சீராகும். ஆடை ஆபரணம் சேரும். கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

**இடபம்**

அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**

உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு. கனவு நனவாகும் நாள்.

**கடகம்**

திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தாயாருக்கு மருத்துவ செலவுகள் அதிகமாகும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**

அரசால் ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கன்னி**

செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். கடந்த சில நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி தெளிவு பிறக்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும்.

**துலாம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். மற்றவர்களுக்காக நியாயம் கேட்கப் போய் பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**விருட்சிகம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும் எதிர்பாராத சந்திப்பு நிகழும். மதிப்பு கூடும் நாள்.

**தனுசு**

உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வாகன வசதி பெருகும்.வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு . சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**

எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கும்பம்**

எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். பிள்ளைகளின் பிடிவாதத்தை அனுசரணையான பேச்சால் சரி செய்யுங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். வேலைச்சுமை மிகுந்த நாள்.

பாவற்குளத்தின் 4 வான்கதவுகள் திறப்பு

# நெளுக்குளம் - நேரியகுளம் வீதி போக்குவரத்துத் தடை!

வவுனியா, ஜன.22

வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதனால் அதன் 4 வான் கதவுகளும் 2 அடிக்கு மேல் திறக்கப்பட்டுள்ளதால் நெளுக்குளம் - நேரியகுளம் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக மத்திய நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால், பல குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19. 4 அடியை அடைந்துள்ளதால், அதன் ஒரு வான் கதவு இரண்டரை அடியும், மூன்று வான்கதவுகள் இரண்டு அடியும் திறக்கப்பட்டுள்ளன.

அத்து டன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர் பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் குளத்து நீர் நெளுக்குளம் - நேரியகுளம் வீதியை மேவிப் பாய்ந்து வருகிறது.

இதனால், அவ் வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அத்துடன் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவ குளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் எனவும் மத்திய நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-10)

## பாரவூர்திகள் மோதி விபத்து, இருவர் காயம்!

மதவாச்சி, ஜன.22

ஏ - 9 வீதியில் பாரவூர்திகள் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி, களுகந்தே பகுதியில் நேற்றுக் காலை மூன்று பாரவூர்திகள் தரித்து நின்ற போது கொழும்பிலிருந்து பயணித்த பாரவூர்தி மோதி விபத்துக்குள்ளானது.இதன்போது, இருவர் காய மடைந்ததுடன், பாரவூர்திகளும் சேதமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)



## கசூரினா சுற்றுலா மையத்துக்கான உட்கட்டுமான வசதிகள் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.22

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் செயல்படுத்தப்பட்டு அமைக்கப்பட்ட கசூரினா சுற்றுலா மையத்துக்கான உட்கட்டுமான வசதிகள் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.



காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் கிருஷ்ணானந்தம் விஜயேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து சிறப்பித்தார். (எ-05)

## ஆளுநரின் உத்தரவு அமுலுக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஜன.22

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 10 சதவீத கழிவு அறவிடப்படுவது இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் விடுத்திருந்த பணிப்புரைக்கு அமைவாக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆளுநருக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் எழுத்துமூலமாக தெரியப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ. சிறீவர்ணனால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில், கடந்த காலங்களில் மத்திய அமைச்சர்களாலும் எமது மாகாண சபைக்கு உரித்தான முதலமைச்சராலும் காலத்துக்கு காலம் பதவியிலிருந்துள்ள ஆளுநர்களாலும் மற்றும் எமது திணைக்கள தலைவர்களாலும் இந்தப் பிரச்னை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருந்த போதிலும் இப் பிரச்னையை எம்மால் 100 சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.

சந்தைகளை குத்தகைக்கு வழங்கும் போது சந்தைக் குத்தகை ஒப்பந்தங்களில் 10 சதவீதக் கழிவு அறவிடப்படமுடியாது என்ற இறுக்கமான வாசகங்கள் உட்படுத்தப்பட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சந்தைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள காட்சிப் பலகைகளிலும் வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் மற்றும் அனைவருக்குமே தெரியக்கூடியதாக இவ் 10 சத வீதக் கழிவு அறவிடப்படுவது சட்டமுரணானது என்பது தொடர்பாக தகுந்த காட்சிப் படுத்தல்கள் சந்தைகளில் காட் சிப்படுத்தப்பட்டுள்ளன. (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இந்தியாவுக்கு தென் மாகாணம் சீனாவுக்கு!

## புபுது ஜாகொட சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 22

**அரசாங்கம், இந்தியா மற்றும் சீன அரசாங்கங்களுடன் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டு பிரகடனம் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இந்தியாவின் ஆதிக்கத்துக்கு கீழ் கொண்டுவருவதற்கும் தென் மாகாணத்தின் கீழ் பிரதேசங்களைச் சீன அரசாங்கத்துக்கு வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த இணக்கப்பாடுகள் மூலம் இலங்கை உலகளாவிய அரசியல் பொறிக்குள் சிக்கிக்கொண்டுள்ளது என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியா மற்றும் சீன அரசாங்கங்களுடன் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டு பிரகடனம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சீன அரசாங்கத்தின் ஒரே மண்டலம் ஒரே பாதை வேலைத்திட்டத்துக்கு இலங்கை முழுமையாக ஆதரவளிப்பதாகவும் அந்த வேலைத்திட்டத்துக்குள் அடங்கிய பல வேலைத்திட்டங்களை இலங்கைக்குள் செயற்படுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருப்பது பாரிய விடயமாகும். ஏனெனில் ஜனாதிபதி அநுரகுமார இந்திய விஜயத்தின் பின்னர் வெளியிட்ட கூட்டுப் பிரகடனத்தில், இலங்கையின் பூமியை இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகும் வரை வேறு எந்த நாட்டுக்கும் பயன்படுத்த இடமளிப்பதில்லை என தெரிவித்திருந்தார்.

அதேநேரம் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கும் பல்வேறு வாங்குறுதிகளை வழங்கியிருப்பதை பார்க்கும்போது, இலங்கைக்குள் பல்வேறு உலகளாவிய அரசியல் வேலைத்திட்டங்களுடன் இந்து சமுத்திரத்தில் செயற்பட்டுவரும் பல்வேறு அதிகாரம் படைத்தவர்களுக்கு, ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவர்களின் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதாக இலங்கை வாக்குறுதி வழங்கி வருகிறது. இது அரசியல் ரீதியில் மிகவும் எச்சரிக்கையான நடவடிக்கையாகும்.

இதன்மூலம் வலயத்தில் அதிகாரமுடையவர்கள் உலக அதிகாரம் படைத்தவர்களுக்கு ஏகாதிபத்தியவாதிகளுடன் ஏற்படுகின்ற சண்டையின் போது இலங்கை முழுமையாக ஈடுபட இடமிருக்கிறது.

யுத்தமொன்றுக்கு இலங்கை இலக்காக இடமிருக்கிறது. கூட்டு பிரகடனம் இரண்டையும் மிகவும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இந்தியாவின் ஆதிக்கத்துக்கு கீழ் கொண்டுவருவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அம்பாந்தோட்டை மாவட்டம் உள்ளிட்ட தென் மாகாணத்தின் கீழ் பிரதேசங்களை சீன அரசாங்கத்துக்கு வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது-என்றார். (அ)

# கோழி இறைச்சி விற்பனை வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 22

மக்களுக்கு போதிய வருமானம் கிடைக்காத காரணத்தினால் நாளாந்த கோழி இறைச்சி விற்பனை 100 மெற்றிக் தொன்களினால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச்.குணசேகர தெரிவித்தார்.

இலங்கையில் நாளாந்தம் 600 மெற்றிக் தொன் கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டாலும், தற்பொழுது நாளாந்தம் கோழி இறைச்சி விற்பனை 500 மெற்றிக் தொன் வரை குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கோழிக்கறிக்கான தேவை குறைந்துள்ளதால் ஐஸ் கோழியின் (உறைந்த கோழி) விலை (தோலுடன்) கிலோ ரூ.800 ஆக குறைந்துள்ளது.

இந்த நாட்களில் முட்டை ஒன்றின் விலை 30 முதல் 33 ரூபா வரை குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை குறைவால் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் உற்பத்தி செலவை ஈடுகட்ட முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சி உற்பத்திக்கு 750 ரூபாயும், முட்டை உற்பத்தி செய்ய 34 ரூபாயும் செலவாகும் என அவர் தெரிவித்தார்.

கோழி பண்ணைகளின் உற்பத்தி செலவில் 75 வீதம் கால்நடை தீவனத்திற்காக செலவிடப்படுவதாகவும், கால்நடை தீவனத்திற்கு பெறுமதி சேர் வரி உட்பட 20 வீத வரி விதிக்கப்படுவதால் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கால்நடை தீவனத்தின் மீதான வரியை குறைக்க அரசு நடவடிக்கை எடுத்தால், நுகர்வோருக்கு குறைந்த விலையில் கோழி மற்றும் முட்டைகளை விற்பனை செய்ய முடியும் என அவர் கூறினார்.

கோழிப்பண்ணை உரிமையாளர்கள் ஒரு முட்டைக்கு 6 ரூபாயும், ஒரு கிலோ கோழி இறைச்சிக்கு 220 ரூபாயும் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கூட்டுறவு சங்க தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி தோல்வி!

## அரசாங்கத்தின் சரிவு ஆரம்பம் என்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜன. 22

பல பிரதேசங்களில் இடம்பெற்ற கூட்டுறவுச் சங்க தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி தோல்வியடைந்துள்ளதன் மூலம் அரசாங்கத்தின் சரிவு ஆரம்பித்துள்ளது. தோல்வியை தடுப்பதற்கே அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஹோமாகம, கொரட்டுவ, களனி,போருவளை போன்ற தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத் தேர்தலில் அதிக பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்ற தேர்தல் தொகுதிகளில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் தோல்வியடைந்துள்ளது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறி வருவதன் அரசாங்கத்தின் மீதான மக்களின் விரக்தி, கூட்டுறவுச் சங்க தேர்தல் மூலம் வெளிப்படு த்தப்பட்டிருக்கிறது. மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை இழந்து வருவதை அரசாங்கமும் தற்போது உணர ஆரம்பித்துள்ளது.

அதன் பிரதிபலனாகவே அரசாங்கம், 3 வருடங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என தெரிவித்து வந்த நிலையில், தற்போது நூற்றுக்கு 20 வீதம் மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளது. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3 வருடங்களுக்கு பின்னரே கூட்டுறவுச் சங்க தேர்தலில் தோல்வியடைய ஆரம்பித்தது. ஆனால் இந்த அரசாங்கம் பாராளுமன்ற தேர்தல் இடம்பெற்று 3 மாதங்களில் தோல்வியடைய ஆரம்பித்துள்ளதன் மூலம் அரசாங்கத்தின் சரிவு ஆரம்பித்திருப்பது தெரியவருகிறது.

அதனால் அரசாங்கம் இந்த சரிவை கையால் பிடித்து சரி செய்ய முடியாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார தெரிந்துகொள்ள வேண்டும். மாறாக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் மூலமே இந்த சரிவை நிறுத்த முடியும். அதனால் அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், வைராக்கியத்தை பரப்புவதன் மூலம் அரசாங்கத்தின் மீது மக்களின் எதிர்பார்ப்பு, நம்பிக்கை மேலும் இல்லாமல் போகும் நிலையே ஏற்படும்.

அத்துடன் ஜனாதிபதி அநுரகுமா முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தை மீளப் பெறுவதாக தெரிவித்திருக்கிறார். இது ஜனாதிபதியின் அனுபவமில்லாமை அல்லது வைராக்கியத்தில் மேற்கொள்ளும் செயலாகும்.

தீர்மானங்களை எடுப்பதற்கு பின்வாக்கும் அபாயம் இருக்கிறது-என்றார். (அ)

# இலங்கைக்குள் நுழைய முயன்ற ஆப்கான் நாட்டவர் நாடு கடத்தல்

கொழும்பு, ஜன. 22

போலியான கஜகஸ்தான் கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி இலங்கைக்குள் நுழைய முயன்ற இரண்டு ஆப்கானிஸ்தான் பிரஜைகள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு பயணிகளும் 21-23 வயதுடைய ஆப்கானியர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் நேற்று அதிகாலை 3.29 மணிக்கு குவைத்திலிருந்து ஜசீரா எயார்வேஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை அடைந்ததும், இருவரும் தங்கள் குடியேற்ற முறைகளை முடிக்க குடிவரவு பிரிவுக்கு சென்று, தங்கள் கஜகஸ்தான் கடவுச்சீட்டையும் மற்றும் ஏனைய ஆவணங்களை ஒப்படைத்தனர்.

அவர்கள் சமர்ப்பித்த கடவுச்சீட்டுகள் தொடர்பான சந்தேகங்கள் காரணமாக, இருவரையும் அவர்களது ஆவணங்களையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள எல்லை கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அங்கு நடத்தப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகளில் இந்த கஜகஸ்தான் கடவுச் சீட்டுகளில் சில பக்கங்கள் நுட்பமாக மாற்றப்பட்டு, போலியாக தயாரிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களின் பொதிகள் சோதனை செய்தபோது, அவர்களின் இரண்டு உண்மையான ஆப்கானிய கடவுச்சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதற்கமைய அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய அவர்கள் இலங்கைக்குள் பயணிக்கவோ அல்லது வேறு நாட்டிற்கு தப்பிச் செல்லவோ எந்த திட்டமும் இல்லை என்பது தெரியவந்தது. அவர்கள் இலங்கையில் குடியேற வந்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குறித்த இருவரையும் குவைத் விமானத்தில் நாடு கடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

# கடலோர ரயில் சேவைகளில் தாமதம்

கொழும்பு, ஜன. 22

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், தெஹிவளை பகுதி ரயில் பாதையில் ஏற்பட்ட சேதம் காரணமாக, கடலோர ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நாளாந்த ரயில் பயணிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் திருத்தம்

கொழும்பு, ஜன. 22

2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை அப்படியே செயற்படுத்தமாட்டோம். பல தரப்பினரும் இந்தச் சட்டத்தினால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என கவலை தெரிவித்துள்ளமையினால் பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் புதிய திருத்தங்களை அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளோம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நிகழ்நிலை முறைகேடுகளைத் தடுப்பதில் சட்டத்தின் பலனைப் பேணுவதுடன், சட்டத்தின் பாதகமான விளைவுகளைக் குறைக்க தேவையான மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச் சர் எரங்க வீரரத்ன தெரி வித்தார்.

தேவையான திருத்தங்களைச் செய்த பிறகு சட்டம் செயற்படுத்தப்படும். தற்போதைய வடிவத்தில் நாங்கள் அதைச் செயற்படுத்தமாட்டோம். திருத்தப்படவேண்டிய பல அம்சங்கள் உள்ளன. இருப்பினும், கருத்துச் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துவதை தடுக்க இந்த சட்டத்தை பயன் படுத்துவோம் பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்தாலோசித்து திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்து மூலம் கோரினால் வெளியேறுவதற்கு தயார்!

## அநுரவுக்கு மகிந்த பதிலடி

கொழும்பு, ஜன. 22

**தான் தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து வெளியேற தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி இந்த விடயத்தை தனக்கு சாதகமான பிரசாரத்துக்கு பயன்படுத்துவதற்கு பதில் எழுத்துமூல வேண்டுகோளை விடுக்கவேண்டும் என கோரியுள்ளார்.**



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் அமைச்சரவையின் அனுமதியின் பின்னரே தனக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்பட்டதாக தெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் எனது பாதுகாப்புக்காக அதனை வழங்கினார்கள். அரசமைப்பின் கீழ் எனக்கு அதற்கான உரிமையுள்ளது என குறிப்பிட்டார்.

நான் அந்த வீட்டிலிருந்து வெளியேறுவதால் ஜனாதிபதிக்கு பலாபலன்கள் கிட்டும் என்றால் நான் அங்கிருந்து வெளியேறத் தயார் எனக் குறிப்பிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ, நான் பலவந்தமாக அந்த வீட்டை பிடித்து வைத்திருக்கவில்லை அங்கிருந்து வெளியேறத் தயார் எனவும் குறிப்பிட்டார்.

அநுரகுமார நாட்டின் ஜனாதிபதி என்றபோதிலும்,அவர் எதிர்க்கட்சி அரசியல்வாதி போல நடந்துகொள்கின்றார் எனவும் மகிந்த தெரிவித்தார்.

நான் மகிந்த ராஜபக்ஷ என்பதை அநுரகுமார மறந்துவிட்டார், அவரது பேச்சுக்கள் அரசியல் மேடைகளுக்கும் தேர்தல் காலத்தில் அவர் போலி வாக்குறுதிகளை வழங்கியதை போல மக்களை தவறாக வழிநடத்துவதற்கும் உகந்தவை என குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி, ஜனாதிபதி எனக்கு எழுத்து மூல வேண்டுகோள் விடுத்தால் எனக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ் தலத்திலிருந்து வெளியேற தயார் என்பதை நான் ஜனாதிபதிக்கு தெரிவிக்கின்றேன் என குறிப்பிட்டார். (அ)

# மக்கள் செல்வாக்கை மதிப்பிட அநாவசிய பொதுக் கூட்டங்கள்

கொழும்பு, ஜன. 22

அராங்கத்துக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு எந்தளவுக்கு காணப்படுகின்றது என்பதை மதிப்பீடு செய்வதற்காகவே தற்போது எந்த காரணமும் இன்றி பொதுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. தமது பொய்களுக்கு நீண்ட ஆயுள் இல்லை என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தாம் ஏற்கனவே கூறிய பொய்களால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர் என்பதை உணர்ந்து கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார அடுத்து தேர்தலை நடத்துவதுவதா இல்லையா என்பதை மதிப்பாய்வு செய்வதற்காக மக்கள் சந்திப்புக்களை நடத்த ஆரம்பித்துள்ளார்.

பொய்களுக்கு நீண்ட நாட்கள் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளது.

அரசியல் மேடைகளில் முன்னாள் ஆட்சியாளர்களை விமர்சித்துக் கொண்டிருப்பதற்கு நீங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர் இல்லை என்பதை ஜனாதிபதி அநுரவுக்கு நினைவுபடுத்துகின்றேன்.

ஊழல், மோசடியாளர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்புடனேயே மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டுக்கும் அதிக பெரும்பான்மையை வழங்கினர்.

ஆனால் இன்றும் ராஜபக்ஷர்கள் மீது குற்றஞ்சுமத்துவதும், குறை கூறுவதும் மாத்திரமே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.சட்டத்தை நடைமுறைப் படுத்தும் தைரியம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை. அரசாங்கம் அதன் இயலாமையை மறைப்பதற்காக மீண்டும் மக்கள் மத்தியில் சென்று பொய்களைக் கூற ஆரம்பித்திருக்கிறது-என்றார். (அ)

# சிறு உற்பத்தி பொருட்களின் விலைகள் குறைவடையலாம்

## சிறுதொழில் வல்லுநர் சங்கம்

கொழும்பு, ஜன. 22

மின்சாரக் கட்டணக் குறைப்புக்குப் பிறகு அடுத்த இரண்டு வாரங்களில் சந்தையில் உள்ள பொருட்களின் விலைகள் குறையும் என்று அகில இலங்கை சிறுதொழில் வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தை 30 வீதத்தால் குறைக்கும் தீர்மானத்தை பொதுப் பயன்பாட்டு ஆணையம் மேற்கொண்டதோடு, இது ஜனவரி 17 முதல் அமுலுக்கு வந்துள்ளதாக சங்கத் தலைவர் நிருக்ஷ குமார தெரிவித்தார்.

இது தொடங்கிய நாளிலிருந்தே உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான மின்சாரச் செலவுகள் கணிசமாக குறைந்துள்ளதாகவும், இதனால் பொருட்களின் விலை 5 வீதம் முதல் 10 வீதம் வரை குறைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, குறைந்த மின்சாரச் செலவில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் சுமார் இரண்டு வாரங்களில் சந்தையில் கிடைக்கும், இதன்மூலம் பொதுமக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

சிறுதொழில் வல்லுநர்கள், இந்த மாற்றம் நிலையானதாக இருக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளதோடு, குறைவான உற்பத்தி செலவுகள் நாட்டின் பொருளாதாரத்துக்கு சாதகமாக அமையும் எனவும் தெரிவித்தனர். (அ)

# ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு தலைவர் சபாநாயகரைச் சந்தித்து பேச்சு

கொழும்பு, ஜன. 22



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோஸ் இக்னாசியோ சன்சேஸ் அமோர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் சபாநாயகருக்கும், புதிய அரசாங்கத்துக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்பட்டமை குறித்து ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

இதில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் வகிபாகத்தைப் பாராட்டிய அவர், இந்த ஆணைக்குழுவை மேலும் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தற்போதைய பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகமாக இருப்பதற்கும் அவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டதற்குத் தனது நன்றியைத் தெரிவிப்பதாக சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

# ரூ.8 லட்சத்து 50ஆயிரம் பெறுமதியான வலம்புரிச் சங்குகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 22

கம்பஹா , திவுலப்பிட்டி நகரத்தில் இரண்டு வலம்புரி சங்குகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திவுலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

திவுலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொஸ்ஹின்ன பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 08 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு வலம்புரிச் சங்குகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் . (அ)

# 55 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 2

நாடளாவிய ரீதியில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையினால் பெரிய மற்றம் நடுத்தர நீர்த்தேக்கங்களில் நீர் நிரம்பி வழிவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தற்போது 73 பிரதான நீர்த்தேக்கங்களில் 55 நீர்த்தேக்கங்கள் நிரம்பியுள்ளதோடு, 60 இற்கும் மேற்பட்ட குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம், பொலனறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் அனைத்து நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழிகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு அபாய வலயங்களாக 22 சுகாதார பிரிவுகள்!

கொழும்பு, ஜன. 22

சீரற்ற கால நிலையோடு நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பை தொடர்ந்து 22 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அதி உயர் அபாயம் மிக்க வலையங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இம்மாதம் 19 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 185 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நாட்டில் நிலவிவரும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக டெங்கு பரவல் அதிகரித்துள்ளமையை காணக் கூடியதாக உள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் பதிவாகக்கூடிய டெங்கு நோயாளர்களின் வீதமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

டெங்கு பரவலை கருத்தில் கொண்டு 22 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதி உயர் டெங்கு அபாயம் மிக்க பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் இரண்டாக ஆக உயர்வடைந்துள்ளது. எதிர்வரும் தினங்களில் பதிவாகக்கூடிய டெங்கு நோயாளர்களின் வீதம் மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன.

கம்பஹா (482), கொழும்பு (433), கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி (411), காலி (197), கண்டி (192), மட்டக்களப்பு (181), இரத்தினபுரி (169) மற்றும் யாழ்ப்பாணம் (126) ஆகிய மாவட்டங்களில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காணக் கூடியதாக உள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இறக்குமதி அனுமதி எம்.பி.க்களுக்கு கிடையாது!

## அமைச்சர் விஜித திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 22

**எதிர்வரும் காலங்களில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

அதேநேரம், இனிமேல் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சிறப்பு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன் தினம் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் அமைச்சர் இதனை கூறினார்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பிலும் அமைச்சர் விஜித ஹேரத் கருத்து வெளியிட்டார். (அ)



# சீரற்ற வானிலை; 20,333 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 22

சீரற்ற வானிலை காரணமாக நாடு முழுவதும் 13 மாவட்டங்களில் 6,797 குடும்பங்களைச் சேர்ந்த 20,333 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அனர்த்தங்களின் விளைவாக இருவர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் இருவர் காயமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால், 174 வீடுகள் பகுதியளவிலும், ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

228 குடும்பங்களைச் சேர்ந்த 686 பேர் அவர்களில் சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# விபத்தில் யுவதி பலி!


கொழும்பு, ஜன. 22

தலாத்துஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் யுவதி உயிரிழந்ததோடு, மேலும் மூவர் படுங்காயங் களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி-மஹியங்கனை பிரதான வீதியில் மயிலப்பிட்டி கீழ்பிரிவு பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பகுதியிலிருந்து மாரக்ஷன உடுதெனிய பகுதியை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்றும், மயிலப்பிட்டிய பகுதியிலிருந்து கண்டி பகுதியை நோக்கிச் சென்ற பாடசாலை சேவை பஸ் ஒன்றும் நேர்க்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி மற்றும் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரில் 18 வயது மகள் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததோடு, தந்தை மற்றும் மற்றுமொருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி ரிகலகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்த யுவதியின் சடலம் மாரஸ்ஸன வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



குறித்த முச்சக்கரவண்டி முன்னே சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டவேளையிலேயே எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியதன் காரணமாக இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (அ)

# அதிகாலையில் பொலிஸாருடன் அர்ச்சுனா எம்.பி. வாக்குவாதம்!

கொழும்பு, ஜன. 22

அநுராதபுரம் ரம்பாவ பகுதியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் குழுவுடன் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று அதிகாலை வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

தனது வாகனத்தில் வி.ஐ.பி. விளக்குகளைப் பயன்படுத்தி ஏனைய வாகனங்களுக்கு இடையூறாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பயணித்த வாகனத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதனால், பணியில் இருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் அர்ச்சுனா எம்.பிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அங்கு எம்.பியிடம் அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தை பொலிஸார் கேட்டுள்ளனர்.

அந்த ஆவணங்களை வழங்க மறுத்து பாராளுமன்ற உறுப்பினர் அடாவடியாக நடந்து கொண்டார் என பொலிஸார் கூறினர்.

நேற்றுக் காலை பாராளுமன்றத்துக்கு சென்றுகொண்டிருந்தபோதே இந்த சம்பவத்தை அர்ச்சுனா எம்.பி. எதிர்கொண்டார். (அ)

# குழுக்களிடையே வாக்குவாதத்தால் ஏற்பட்ட மோதலில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜன. 22

கம்பகா - கந்தானை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகொட பகுதியில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தால் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கந்தானை, நாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் நாகொட, கந்தானை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களும், காயமடைந்தவர்களும் இரு தரப்பையும் சேர்ந்தவர்கள் எனவும், தனிப்பட்ட தகராறு காரணமாக இம் மோதல் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் விசேட பாதுகாப்பு பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபராக ஜகத்!

கொழும்பு, ஜன. 22

பொலிஸ் விசேட பாதுகாப்புப் பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான பிரதிப் பொலிஸ் மாஅதிபராக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜகத் விஷாந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய இந்த நியமனத்தை வழங்கியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ஜகத் விஷாந்த இதற்கு முன்னர் மட்டக்களப்பு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றினார்.

மட்டக்களப்பு பிராந்தியத்திற்கான கடமைகள் அம்பாறை பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் எச்.சமுத்ரஜீவவினால் நிறைவேற்றப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க குறிப்பிட்டார். (அ)

# நேற்று மீளத் திறக்கப்பட்டது கண்டி-மஹியங்கனை வீதி

கொழும்பு, ஜன. 22

உடுதும்பர - கஹடகொல்ல பகுதியில் மண்சரிவு மற்றும் கல் உருளுதல் காரணமாகத் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கண்டி -மஹியங்கனை வீதி நேற்று காலை 6 மணிக்கு மீளத் திறக்கப்பட்டது.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

குறித்த வீதியை இரவு நேரங்களில் பயன்படுத்தும் வாகனங்கள் மற்றும் சாரதி களுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என கருதி நேற்று முன் தினம் மாலை 6 மணி முதல் கண்டி-தென்னக்கும்புர சந்தி மற்றும் ஹசலக பாலத்திற்கு அருகில் 12 மணித்தியாலங்கள் மூடப்பட்டது. (அ)

## மின்சார வேலியில் சிக்கி வயோதிபர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 22

கண்டி - தவுலகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டகேதெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தவுலகல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கண்டி, கடுகண்ணாவை பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய வயோதிபர் ஆவார்.

வயோதிபர் கொட்டகேதெனிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு சென்றுள்ளார். இதன்போது, காணியை சுற்றி சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நெல்லுக்கான குறைந்தபட்ச விலை வழங்க நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 22

நெல்லுக்கான உத்தரவாத விலைக்குப் பதிலாக எதிர்காலத்தில் குறைந்தபட்ச விலையை வழங்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய மற்றும் கால்நடைவள பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நெல் உற்பத்திக்கான விலையை மூன்றில் ஒரு பங்கு அதிகரித்து நெல் உற்பத்திக்கான விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

அந்த விலைக்கேற்பவே நெல் கொள்வனவு இடம்பெறும்.

அத்துடன் நெல்லுக்கான குறைந்தபட்ச விலையும் நிர்ணயிக்கப்படும் என விவசாய மற்றும் கால்நடைவள பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை ஒருபோதும் கையில் எடுக்கமாட்டோம்

## பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.22

**கடந்த கால ஆட்சியாளர்கள் தங்களின் தோல்வியின் விளிம்பில் எடுக்கும் ஆயுதம் இனவாதமாகும். ஆனால், எமது அரசாங்கத்தில் ஒரு காலமும் இனவாதத்தை கையில் எடுக்கப் போவதில்லை என்று பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்தார்.**

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் பிரபல எழுத்தாளர் வி. மைக்கல் கொலினின் எழுதிய "அன்பின் முத்தங்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறுகையில், "எமக்கு எந்தவித பாதிப்புகள் வந்தாலும் நாம் ஒரு போதும் இனவாதத்தை கையில் எடுக்கப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை நான் உங்களுக்குத் தருகின்றேன். தற்போது, நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தில் அரசியல் நெருக்கடி நீக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடிகள் காணப்படுகின்றன. இவற்றை நாம் வேகமாக மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

நாம் நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள் ளது. சமூக மாற்றத்தின் பிர தான பங்கினை இலக்கியவாதிகள் வகிக்கின்றனர்.

எமக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் பலமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அரசியல் முரண்பாடுகளானது தேர்தல் நிறைவடைந்த



பின்னர் கைவி டப்பட வேண்டும்.

மக்களுக் காக நாம் இன மத மொழி வேறுபாடு இன்றி ஒன்றிணைய வேண்டும். நாம் சரியான திசைக்கு மக்களை வழிநடத்த வேண்டிய இடத் தில் இருக்கின் றோம்"- என்றார். (எ)

# கிழக்கில் தொடரும் கடலரிப்பு கடற்கரை பூங்கா பாதிப்பு

திருகோணமலை, ஜன.22

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழை காரணமாக, கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு திருகோணமலை, கிண்ணியா கடற்கரை பூங்காவின் அடுத்த பகுதியையும் கடலலை கொண்டு சென்றுள்ளது.

கடந்த மாதம் ஏற் பட்ட வெள்ளம் காரணமாக இந்தப் பூங்காவை அலங்கரித்துக் கொண்டிருந்த பெரிய மரம் ஒன்று வேரோடு விழுந்தத னால், பூங்காவின் ஒரு பகுதியை கடலலை அடித்துச் சென்றிருந்தது.



அந்த நேரத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகரும், பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரவும் நேரில் வந்து இந்த பூங்காவை பார்வையிட்டிருந்தனர். எதிர்காலத்தில் இந்தப் பூங்காவை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், நேற்று முன்தினம் மற்றுமொரு பெரிய மரமும் வேரோடு விழுந்து, பூங்காவின் அடுத்த பகுதியும் கடலுக்கு இரையாகியுள்ளது.


இந்த நிலையில், பூங்காவின் எஞ்சியுள்ள பகுதி அவசரமாக பாதுகாக்கப்பட வேண்டும் என் றும் தவறும் பட்சத்தில், இன்னும் ஒரு வெள்ளம் ஏற்படுகின்ற போது, பூங்காவை முழுமையாக இழக்க வேண்டிய நிலை ஏற்ப டும் என வும், எனவே, பூங்காவை பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உள்ளூராட்சி உதவி ஆணையாளராக அஸீம் கடமைகளை பொறுப்பேற்றார்

கல்முனை, ஜன.22

அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான ஏ. எஸ். எம். அஸீம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது, அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக



உத்தியோகத்தர்களால் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ. ரி. எம். ராபி, அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸ் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளராக கடமையாற்றி வருகின்ற நிலையில் அப்பதவிக்கு மேலதிகமாகவே கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரால் இவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ)

# சங்காபிஷேகமும் பாற்குட பவனியும்

மட்டக்களப்பு, ஜன.22

மட்டக்களப்பு - தாண்டியூர் சிறீ சித்திரவேலாயுதப் பெருமான் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகமும் பாற்குட பவனியும் நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கரையாக்கன்தீவு அருள்மிகு சிறீ கருமாரியம்மன் ஆலயத்தில் இருந்து காலை 08. 00 மணியளவில் பாற்குடப்பவனி எடுத்துவரப்படும் என்றும் பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்களும், பெருமானின் சங்காபிஷேகத்துக்கு உபயம் செய்ய விரும்புவோரும் தங்கள் து பெயர் விபரங்களை முன்கூட்டியே ஆலய பரிபாலன சபையினரை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

# சாதாரண தர பெறுபேறுகளை மேம்படுத்த செயல்திட்டங்கள்

கல்முனை, ஜன.22

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) க. பொ. த. சாதாரண தர மாணவிகளின் பெறுபேறுகளை மேம்படுத்தும் நோக்கில் பாட ரீதியிலான கருத்தரங்குகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அப்பிரிவின் பகுதித்தலைவர் ஏ.ஆர்.எம். நளீம் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டு மாணவிகளுக்கு சிறந்த அறிவுரை, ஆலோசனைகளையும் வழங்கினார். பாட ரீதியிலான கருத்தரங்குகள் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர்களின் வழிகாட்டல்களில் பல்லூடக தொழில்நுட்ப உதவிகளுடன் நடைபெற்றன.

கடந்த வரு டம் இப்பாடசாலையில் இருந்து 26 மாணவி கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றிருந்தனர். (எ)

# வாய்க்காலுக்குள் வீழ்ந்த அம்புலன்ஸ் சாரதி, மருத்துவனை ஊழியர் காயம்!



திருகோணமலை, ஜன.22

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள பாலத்தோப்பூர் பகுதியில் அம்புலன்ஸூம், கப் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் அம்புலன்ஸ் வாய்க்காலுக்குள் புரண்டு வீழ்ந்தது. இதில் அம்புலன்ஸில் வந்த இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் கிளிவெட்டி பிரதேச மருத்துவமனையின் அம்புலன்ஸ் சாரதி மற்றும் மருத்துவமனை ஊழியரும் படுகாயமடைந்து கிளிவெட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மூதூர் தள மருத்துவமனையில் நோயாளிகளை விட்டு விட்டு கிளிவெட்டி பிரதேச மருத்துவமனையை நோக்கி வரும் வழியிலேயே இந்த விபத்துச்சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அம்பாறையில் ரூ. 50 லட்சம் செலவில் 2000 பேருக்கு உலர் உணவு பொதிகள்

## தனி ஒருவரின் மனிதாபிமான பணி




திருக்கோவில், ஜன.22

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2000 பேருக்கு தனி ஒருவர் 50 இலட்சம் ரூபாய் செலவில் உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளார்.

இம் மனிதாபிமான பணி அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

திருக்கோவிலைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும் கல்முனை றோட்டரிக்கழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் இந்த மனிதாபிமான பணியை செய்துள்ளார்.

திருக்கோவிலில் 500 பொதிகளும், தம்பிலுவில் 500 பொதிகளும் , தம்பட்டையில் 100 பொதிகளும், விநாயகபுரத்தில் 500 பொதிகளும், தாண்டியடியில் 150 பொதிகளும், தங்கவேலாயுதபுரத்தில் 100 பொதிகளும், சாகாமத்தில் 50 பொதிகளும், சின்னதோட்டத் தில் 150 பொதிகளும் இவ்வாறு வழங்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அமெரிக்காவின் பொற்காலம் ஆரம்பம்

## ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜன.22

**அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கியுள்ளது என்று புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஒரு வலிமையான அமெரிக்காவை நான் கட்டமைப்பேன் என்றும் அவர் கூறினார்.**



அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றார். 2ஆவது முறையாக ட்ரம்ப் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளார்.

ட்ரம்ப் பதவியேற்பு விழாவானது, இசை நிகழ்ச்சியுடன் வெகு விமரிசையாக நடைபெற்றது. அமெரிக்க உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரொபர்ட்ஸ் ஜூனியர், ட்ரம்புக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார். அப்போது, ட்ரம்புக்கு மரியாதை அளிக்கும் விதத்தில் பீரங்கி குண்டுகள் முழங்கின.

இதே விழாவில் துணை ஜனாதிபதி ஜே. டி.வான்ஸும் பதவியேற்றார். இந்த நிகழ்ச்சியில், முன்னாள் ஜனாதிபதிகளான ஜார்ஜ் புஷ், ஒபாமா ஆகியோர் கலந்து கொண்டனர். அமெரிக்க ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறும் ஜோ பைடன், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஆகியோரும் இந்த பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.

இதன்பின்னர் ட்ரம்ப் உரையாற்றினார். அப்போது, "அமெரிக்காவின் பொற்காலம் தற்போது முதல் தொடங்கியுள்ளது. இதுவரையில்லாத வகையில், ஒரு வலிமையான அமெரிக்காவை நான் கட்டமைப்பேன். இந்த நாளிலிருந்து அமெரிக்கா செழித்து வளரும். உலக நாடுகள் முழுவதும் மதிக்கப்படும். அமெரிக்கர்களின் பாதுகாப்பு மீட்டெடுக்கப்படும்- என்றார்.

அவர் தனது உரையின் போது, ஜோ பைடனை தாக்கி பேசினார். இயற்கை பேரிடர்களை தடுப்பதில் பைடன் அரசு தோல்வியடைந்து விட்டது. எல்லை பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களை பைடனால் தீர்க்க முடியவில்லை- என்றார். அமெரிக்காவில் பல உயிர்களை காவு வாங்கிய துப்பாக்கி கலாசாரத்துக்கு முடிவு கட்டுவேன் என்றும் ட்ரம்ப் தனது உரையில் குறிப்பிட்டார்.(எ)

## "உக்ரைன் போர் முடிவுக்கு வரும்"



வாஷிங்டன்,ஜன.22

"உக்ரைன் மீதான ரஷ்ய போர் முடிவுக்கு வரும்"- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.

ட்ரம்ப் பதவியேற்பு விழாவை முன்னிட்டு, வாஷிங்டனில் நடைபெற்ற வெற்றிக் கூட்டத்தில், தனது ஆதரவாளர்கள் மத்தியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பதவியேற்ற முதல் நாளிலேயே அமெரிக்க குடியேற்றத்துக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும், ஊடுருவலுக்கு முடிவு கட்டப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவேன். அமெரிக்கா சந்திக்கும் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும். கடந்த 2021இல் நடந்த கேபிடல் வளாக வன்முறை தொடர்பாக, தண்டனை விதிக்கப்பட்ட 1,500 பேருக்கு மன்னிப்பு அளிக்கப்படும். உக்ரைனிலும், மத்திய கிழக்கிலும் போரை முடிவுக்கு கொண்டு வந்து, 3ஆம் உலகப் போர் நடைபெறுவதை தடுப்பேன் என்று ட்ரம்ப் கூறினார். (எ)

## உலகப் போர்களில் இனி அமெரிக்கா பங்கேற்காது

### தென் எல்லையில் அவசர நிலை!

வாஷிங்டன்,ஜன.22

உலகப் போர்களில் அமெரிக்கா இனி பங்கேற்காது என அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவின் தென் எல்லைகளில் அவசர நிலையை அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக நேற்று முன்தினம் பதவியேற்ற ட்ரம்ப், நாட்டு மக்களிடையே உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, அமெரிக்காவில், ஆண், பெண் என்ற இரு பாலினங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்படும். இராணுவத்துக்கு நாட்டை பாதுகாப்பதே இனி கடமையாக இருக்கும். உலகப் போர்களில் அமெரிக்கா இனி பங்கேற்காது. அமெரிக்க இராணுவம் வலிமை பெற்ற ஒன்றாக கட்டமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

நாங்கள் பனாமா கால்வாயை மீட்டெடுக்க போகிறோம். நோய்களில் இருந்து குழந்தைகளை காப்போம். அமெரிக்க கொடியை செவ்வாய் கிரகத்தில் பறக்க விடுவோம்.

இனி மின்சார வாகனங்கள் கட்டாயம் என்ற உத்தரவு வாபஸ் பெறப்படும். மக்கள் அவர்கள் விரும்பிய வாகனங்களை பயன்படுத்தி கொள்ளலாம். பேச்சுரிமைக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்படுகிறது.

சட்டத்துக்கு உட்படாத குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அமெரிக்கா வளர்ந்து வரும் நாடாக உள்ளது. அமெரிக்காவின் எல்லைகளை விரிவாக்குவோம். நம்முடைய மக்கள் உலகில் மிக சிறந்த குடிமக்கள் ஆவர். உலகத்தில் முடியாதது என்று எதுவுமே இல்லை. இதற்கு நானே சான்று என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டார். (எ)

## பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா மீண்டும் வெளியேறியது

வாஷிங்டன்,ஜன.22

பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதாக 2ஆவது முறையாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

சர்வதேச அளவில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள புவிவெப்பமயமாதலை கட்டுப்படுத்த உலக நாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன. புவி வெப்ப மயமாதலை 2 டிகிரி செல்சியசுக்கு மிகாமல் கட்டுப்படுத்து வதற்கான பருநிலை மாற்றம் தொடர்பான ஒப்பந்தம் கடந்த 2015ஆம் ஆண்டு பாரிஸில் நடந்த கூட்டத்தின்போது எட்டப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் முதலில் இணைந்த அமெரிக்கா, ட்ரம்ப் ஆட்சி காலத்தின் போது விலகுவதாக அறிவித்தது. வளரும் நாடுகளுக்கு ஆதரவாக இந்த ஒப்பந்தம் இருப்பதாக விமர்சித்து வந்த ட்ரம்ப், பருவ நிலை ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதனையடுத்து ஜோ பைடன் ஆட்சிக் காலத்தில் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைந்தது.இந்த நிலையில் பாரிஸ் பரு வநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை இரண்டாவது முறையாக விலக்கிக் கொள்வ தற்கான உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று கையெழுத்திட்டார்.(எ)

## சுகாதார மையத்திலிருந்தும் வெளியேறியது அமெரிக்கா

வாஷிங்டன்,ஜன.22

உலக சுகாதார மையத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதற்கான உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அடுத்த 4 ஆண்டுகளுக்கான தனது திட்டங்கள் மற்றும் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை ட்ரம்ப் வெளியிட்டு வருகிறார்.

அமெரிக்காவிடம் இருந்து பெரும் பங்கு நிதியை பெற்றுக் கொண்டு கொரோனா பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு பேரிடர்களை சரிவர கையாள உலக சுகாதார மையம் தவறிவிட்டதாக தனது தேர்தல் பிரசாரத்தின்போது தெரிவித்திருந்த நிலையில் தற்போது அதில் இருந்து விலகுவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

தனது முதல் ஆட்சியின் இறுதியிலும் இதே உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஒரேயொரு இரவு விருந்தில் ரூ. 6,800 கோடி! ட்ரம்ப் சாதனை

வாஷிங்டன்,ஜன.22

ஒரேயொரு இரவு விருந்தில் 6,800 கோடி ரூபாயை அள்ளி ட்ரம்ப் புதிய சாதனை படைத்துள்ளார்.

உலகம் முழுவதுமுள்ள கோடீஸ்வரர்கள் பலரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி ஜே. டி. வான்ஸுடன் தனிப்பட்ட முறையில் இரவு விருந்தில் பங்கேற்க சென்றுள்ளனர். இதற்காக அவர்கள் பெரிய தொகையை செலவிட்டுள்ளனர்.

இந்தத் தொகையானது இலங்கை பெறுமதியில் 6,800 கோடி ரூபாயை அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், ஒரு புதிய சாதனை படைக்கப்பட் டுள்ளது. (எ)

## தாய்வானில் நிலநடுக்கம்

தைபே,ஜன.22

தாய்வான் நாட்டில் நேற்றுக் காலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நாட்டின் யுஜிங் நகரில் இருந்து வடக்கே 12 கிலோமீற்றர் தொலைவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தைமையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 6. 0 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. இரவு வீடுகளில் தூங்கிக்கொண்டிருந்த மக்கள் நிலநடுக்கத்தால் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலையில், இந்த நிலநடுக்கத்தில் 15 பேர் காயமடைந்தனர். உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் ஏற்படவில்லை. (எ)

## மக்கள் நம்பும் நாடுகளில் இந்தியாவுக்கு பின்னடைவு

டாவோஸ், ஜன.22

மக்களின் நம்பிக்கையை பெற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா ஓர் இடம் பின்னடைவைக் கண்டு 3ஆவது இடத்தை பிடித்துள்ளது.

சர்வதேச அளவில் நாடுகளை பல நிலைகளில் மதிப்பீடு செய்து அறிக்கை வெளியிடும் எடில்மேன் என்ற அமைப்பு 2024ஆம் ஆண்டுக்கான தனது 25ஆவது ஆண்டறிக்கையை ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மன்றத்தில் சமர்ப்பித்தது. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, தென் ஆபிரிக்கா, சீனா, கனடா, பிரேசில் என 28 நாடுகளில், 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரிடம் கருத்துகளைக் கேட்டறிந்து, அதனடிப்படையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக எடில்மேன் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் குறைந் தது 1150 பேரிடம் கருத்துகள் கேட்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி

கோலாலம்பூர், ஜன.22

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை மகளிர் அணி 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஐ. சி. சி. மகளிர் (19 வயதுக்குட்பட்ட) ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர் மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற போட்டியிலேயே இலங்கை அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதற்கமைய, 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பின்னர், 167 என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் 19 வயதுக்குட்பட்ட மகளிர் அணி 19. 4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 85 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவியது.இந்த வெற்றியின் ஊடாக குழு ஏ புள்ளிப் பட்டிய லில் இலங்கை அணி 4 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (எ)



## ரிஷப் பண்ட் தலைமையில் 5 கிண்ணங்கள் வெல்வோம்

### லக்னோ அணி உரிமையாளர் நம்பிக்கை

மும்பை,ஜன.22

ஐ. பி. எல். தொடரின் 18ஆவது சீசன் எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி தொடங்குகிறது. இந்த நிலையில், இந்த சீசனில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியின் தலைவராக ரிஷப் பண்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இதை லக்னோ அணி நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

லக்னோ அணியின் உரிமையாளரான சஞ்ஜீவ் கோயங்கா கூறும்போது, “ரிஷப் பண்டை, பிறவி தலைவராகவே நான் பார்க்கிறேன். என்னை பொறுத்தவரையில் ஐ.பி.எல். கண்ட சிறந்த தலைவராக ரிஷப் பண்ட் இருப்பார். ரிஷப் எங்களுக்காக குறைந்தது 14 முதல் 15 ஆண்டுகள் விளையாடுவார். இந்த ஆண்டுகளில் குறைந்தது ஐந்து ஐ.பி.எல். கிண்ணங்களையாவது அவர் வெல்வார் என்று நம்புகிறோம்”- என்றார். (எ)




## இங்கிலாந்து அணி அறிவிப்பு





கொல்கத்தா, ஜன.22

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான முதல் ரி -20 போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இன்று நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் பங்கேற்கும் இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த அணியில் தொடக்க வீரர்களாக பென் டக்கட் மற்றும் பில் சால்ட் களமிறங்குகின்றனர்.

இங்கிலாந்து விளையாடும் அணி விவரம், பென் டக்கட், பில் சால்ட் (விக்கெட் காப்பாளர்), ஜோஸ் பட்லர் (தலைவர்), ஹாரி புரூக், லியாம் லிவிங்ஸ்டன், ஜேக்கப் பெத்தேல், ஜேமி ஓவர்டன், கஸ் அட்கின்சன், ஜோப்ரா ஆர்ச்சர், ஆதில் ரஷித், மார்க் வுட் ஆகியோர் விளையாடவுள்ளனர். (எ)

## வெறும் 2. 5 ஓவர்களில் வெற்றி பெற்ற இந்தியா



கோலாலம்பூர், ஜன.22

ஜூனியர் மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் வெறும் 2. 5 ஓவர்களில் மலேசியாவை வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.

இந்தத் தொடரில் தனது 2ஆவது லீக் ஆட்டத்தில் இந்தியா நேற்று மலேசியாவுடன் மோதியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மலேசியா இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்களை பறிகொடுத்தது. அந்த அணியில் ஒரு வீராங்கனை கூட இரட்டை இலக்கத்தை தொடவில்லை. இந்தியா தரப்பில் 14ஆவது ஓவரை வீசிய வைஷ்ணவி சர்மா அந்த ஓவரில் ஹட்ரிக் எடுத்து அசத்தினார்.

14. 3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த மலேசியா 31 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக நுர் அலியா மற்றும் ஹூஸ்னா தலா 5 ஓட்டங்கள் அடித்தனர். இந்தியா தரப்பில் வைஷ்ணவி சர்மா 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 32 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி இந்தியா களமிறங்கியது. வெறும் 2. 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 32 ஓட்டங்கள் அடித்த இந்தியா 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கோங்கடி திரிஷா 27 ஓட்டங்களும், கமலினி 4 ஓட்டங்களும் எடுத்தனர். வைஷ்ணவி சர்மா ஆட்ட நாயகியாக தெரிவு செய்யப்பட்டார். (எ)

## இந்தியா - இங்கிலாந்து முதல் போட்டி இன்று

கொல்கத்தா, ஜன.22

இந்தியா - இங்கிலாந்து மோதும் முதல் ரி - 20 போட்டி இன்று நடைபெறுகிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ரி - 20 தொடர் நடைபெறுகிறது.

இதன்படி இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதல் ரி - 20 போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இன்று இரவு 7 மணியளவில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி இரு அணி வீரர் [illegible] வருகின்றனர். (எ)


## ஆஸி ஓபன் ரென்னிஸ்: அரையிறுதியில் ஸ்வரெவ்

மெல்பேர்ன், ஜன.22

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் முதல் வீரராக ஸ்வரெவ் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இந்தத் தொடரில் தற்போது காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதலாவது காலிறுதி ஆட்டத்தில் அலெக்ஸ் சாண்டர் ஸ்வரெவ் (ஜேர்மனி), டாமி பாலுடன் (அமெரிக்கா) மோதினார்.

இதில் முதல் 2 செட்களை ஸ்வரெவ் கைப்பற்றிய நிலையில், 3ஆஅது செட்டை டாமி பால் கைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற 4ஆவது செட்டை ஸ்வரெவ் கைப்பற்றி முதல் வீரராக அரையிறுதிக்கு முன்னேறினார். இந்த ஆட்டத்தில் ஸ்வரெவ் 7-6, 7-6, 2-6 மற்றும் 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். (எ)



## காலிறுதி ஆட்டத்தில் கோகோ கப் தோல்வி

மெல்பேர்ன், ஜன.22

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் கோகோ காப் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

இந்தத் தொடரில் தற்போது காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் 3ஆம் நிலை வீராங்கனையான கோகோ காப் (அமெரிக்கா), ஸ்பெயினின் பாலா படோசாவுடன் மோதினார்.

இதில் 5-7 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்த கோகோ காப் அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரிலிருந்து வெளியேறினார். வெற்றி பெற்ற பால படோசா அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)



## டி மினார் அசத்தல்

மெல்பேர்ன், ஜன.22

ஆஸி ஓபன் ரென்னிஸ் தொடரில் அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார் அசத்தல் வெற்றி பெற்றுள்ளார்.

ஆண்டின் முதல் “கிராண்ட்ஸ்லாம்“ போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் அலெக்ஸ் மைக்கேல்சன், முன்னணி வீரரான அலெக்ஸ் டி மினாருடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய டி மினார் 6 - 0, 7 - 6 (7-5), 6 - 3 என்ற செட் கணக்கில் அலெக்ஸ் மைக்கேல்சனை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இன்று 22 ஆம் திகதி நடைபெறும் காலிறுதி ஆட்டம் ஒன்றில் டி மினார், இத்தாலியின் ஜன்னிக் சின்னெரை எதிர்கொள்கிறார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணய...

ஒப்புக்கொண்ட அமைச்சர், இந்த சவால்களைத் தணிக்க வடிவமைக்கப் பட்ட பல முயற்சிகளை அரசாங்கம் கோடிட்டுக் காட்டியுள்ளதாக கூறினார். (அ)

## விமான...

சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் நானும் அங்கு இருந்தேன். குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் அவருக்கு எதிராக பயணத்தடை உள்ளதாக கூறினர். அதனை தொடர்ந்து கலந்துரையாடி நாம் இந்தியாவுக்கான விஜயத்தை மேற் கொண்டிருந்தோம்.

இத்தகைய விடயங்கள் காணப்படின் நீதிமன்றத்தின் உத்தரவு அவசியம். ஆனால் அதிகாரிகள் அவருடைய பாராளுமன்ற வரப்பிரசாத்தை மீறும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

அரசாங்கம் இன்னமும் பயங்கரவாத தடை சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு இந்த விடயத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார். (அ)

## 3முதலீட்டு...

உலக வங்கி பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், கிளீன் சிறிலங்கா, கிராமிய வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்கு உலக வங்கியிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க இதன்போது உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் கல்வி, எரிசக்தி, டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் வடக்கு அபிவிருத்தி ஆகியவற்றில் புதிய திட்டங்களுக்கு உதவி வழங்குவது குறித்து இதன்போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

உலக வங்கி இலங்கைக்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் உதவியை உரிய சமயத்தில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக மார்டின் ரேசர் தெரிவித்தார்.

மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார-

கல்வித் துறை முன்னேற்றத்தின் மூலம் கிராமிய வறுமையை ஒழிக்க முடியும் என்றும் அதற்காக புதிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்வி சீர்திருத்த முயற்சிகளுக்கும், பொதுப் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கும் தேவையான உதவிகளை வழங்குமாறு உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான புதிய திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் இந்த கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

விமான நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்திக்கான புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும், துறைமுக அபிவிருத்தியை துரிதமாக மேற்கொள்ள இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

குறிப்பாக வடக்கின் அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்களை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், நீர் வசதிகளை வழங்கவும், வடக்கு மக்களின் சமூகப் பிரச்னைகளுக்கு கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார். (அ)

## பயங்கரவாத...

நிலையத்தில் எதிர்நோக்கிய அசௌகரியத்துக்கு வருந்துகிறோம். இந்த விடயம் தொடர்பாக தற்போதே எனக்கு அறியக் கிடைத்தது. விமான சேவைகள் நிறுவனத் தலைவரிடம் இந்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரியுள்ளேன். அதுபோல் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவிடமும் நான் இந்த விடயம் தொடர்பாக அறிவுறுத்தியுள்ளேன். சிறீதரனின் பாராளுமன்ற வரப்பிரசாதங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ)

## அர்ச்சுனா...

இடையூறு விளைவிக்கும் வகையில் செயல்பட்டார் என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீது பொலிஸார் விசாரணை நடத்தினர். மேலும் இது தொடர்பாக அனுராதபுரம் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆதாரங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

அதன்படி, அனுராதபுரம் நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார். (அ)

## கைதடி...

மிதப்பதாக விவசாயிகள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிசுவின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் சிசுவை பிரசவித்தவர் என சந்தேகிக்கப்படும் 43வயதான 3பிள்ளைகளின் தாய், கிளிநொச்சி பகுதிக்கு தப்பிச்செல்ல முற்பட்ட வேளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார் எனவும், அவருடன் அப்பெண்ணின் தாய் மற்றும் சகோதரியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## செல்வம்...

பிறப்பிக்கப்பட்ட நிலையில் நேற்று நீதிமன்றத்துக்கு சென்று வந்த பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ஆட்சிக் காலத்தில் முள்ளிவாய்க்காலில நடந்த அனர்த்தங்களையும், இராணுவம் செய்த கொடூரமான செயற்பாடுகளையும் பொது வெளியில் பேசியதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளுடன் இணைந்து இலங்கை அரசாங்கத்துக்கு சதி செய்தேன் என்ற அடிப்படையில் எம்மை கைது செய்தார்கள்.

வவுனியாவிலும், அனுராதபுரத்திலும் வழக்குகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. கடந்த 16 ஆம் திகதி வழக்கு நடைபெற்றபோது நான் அதற்கு சமூகமளிக்கவில்லை. அதனால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இன்றையதினம் (நேற்று) அந்த பிடியாணையை நிவர்த்தி செய்வதற்காக நான் எனது வழக்கறிஞருடன் நீதிமன்றம் சென்றிருந்தேன்.

அங்கு சென்று ஆஜராகியபோது 25 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையும், எனது கடவுச்சீட்டை ஒப்படைக்கவேண்டும் என்றும் நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டிருந்தது. என்னோடு மரியசீலன் என்பவர் தொடர்ச்சியாக இந்த வழக்கில் சமூகமளித்துக் கொண்டிருந்தார். அவர் 8 வருடம் சிறையில் இருந்தவர்.

கடவுச்சீட்டை ஒப்படைக்க வேண்டும். வெளிநாடு செல்வதாக இருந்தால் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்திச் செல்லலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு 15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகிறது - என்றார். (அ)

## பல்வேறு நெருக்கடி...

பணிப்பாளர்கள், பொது மருத்துவமனைப் பணிப்பாளர்கள், ஆதார மருத்துவமனைப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

முன்னைய ஆளுநரின் காலத்தில் ஒப்பந்த அடிப்படையிலான மருத்துவர்களுக்கு விண்ணப்பம் கோரி பெறப்பட்டபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகப்பெரும் நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலேயே சேவைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். மாவட்ட பொதுமருத்துவமனையில் போதுமான விடுதிகள் இல்லை என்பதையும் அவர் ஆளுநருக்கு எடுத்துரைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மாவட்ட பொது மருத்துவ மனையின் பணிப்பாளர் ஆகியோர் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பில் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

மருத்துவமனைப் பணியாளர்களுக்கான விடுதிப்பற்றாக்குறை தொடர்பிலும் சுட்டிக்காட்டினர். இதற்கு மாற்று ஒழுங்காக பளையில் அமைக்கப்பட்டுள்ள விடுதிகளைப் பயன்படுத்த மாகாண சுகாதரப் பணிப்பாளர் விடுத்த கோரிக்கைக்கு ஆளுநர் சாதகமான பதிலை வழங்கினார்.

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையின் பணிப்பாளர், மருத்துவமனைக்கு விடுதி வசதி அவசரமாகத் தேவைப்படுவதாகச் சுட்டிக்காட்டியதுடன் இது தொடர்பில் கடந்த காலங்களில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை நிறைவேற்றப்படவில்லை என ஆளுநருக்கு எடுத்துரைத்தார்.

மருத்துவமனைக்கு கணக்காளர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு பணிப்பாளர் முன்வைத்த கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளரை ஆளுநர் பணித்தார். மன்னார் மாவட்ட மருத்துவமனையை கஷ்டப் பிரதேச மருத்துவமனை என்ற பிரிவுக்குள் இருநது விடுவிக்குமாறும் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்தார்.

வவுனியா மாவட்ட பொதுமருத்துவமனைக்கும் ஆளணி தேவைப்பாடுகள் இருப்பதாக பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். மேலும் வவுனியா மாவட்டத்திலுள்ள 8 பிரதேச மருத்துவமனைகளுக்கு தாதிய வெற்றிடங்கள் உருவாக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதனை உருவாக்கித் தருமாறும் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப் பகுதிகளுக்கான அம்புலன்ஸ் படகின் தேவைப்பாடு தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை முன்வைத்தார். மேலும் சாரதிகளுக்கான தேவைப்பாடு அதிகம் இருப்பதாகத் தெரிவித்த பணிப்பாளர், சில சாரதிகள் முன்னறிவிப்பின்றி திடீரென பணியை விட்டு விலகுவதால் இந்த நெருக்கடி அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

சில மருத்துவமனைகளில் அம்புலன்ஸ் இருந்தாலும் சாரதிகள் இல்லாத நிலைமை இருப்பதாகத் தெரிவித்தார். ஒப்பந்த அடிப்படையில் அவர்களை உள்ளீர்ப்பது தொடர்பில் ஆராயுமாறு பிரதம செயலாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கினார்.

மருந்து விநியோகிப்பதற்குரிய ஆளணிகளின் பற்றாக்குறை தொடர்பிலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

மருந்து விநியோகிப்பவர்களுக்கான பயிற்சிகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு நோயாளர்கள் வருவதற்குரிய போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித்தரவேண்டும் என்ற கோரிக்கை மருத்துவமனை பொறுப்பு மருத்துவ அதிகாரியால் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கில் ஆளணிப்பற்றாக்குறை நிலவும் நிலையில் சில மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்படும் மருத்துவர்களில் சிலர் முழுமையாக அங்கு பணியாற்றுவதில்லை எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆளுநருக்கு தெரியப்படுத்தினார்.

4 மருத்துவர்கள் மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டால் இருவர் மாத்திரம் ஒரு வாரம் கடமையிலிருப்பர் எனவும் எஞ்சிய இருவரும் விடுமுறையில் செல்கின்றனர் எனவும் குறிப்பிட்ட பணிப்பாளர், இதனால் கடமையிலிருப்பவர்கள் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-05)

## சுமந்திரனை...

அரசின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வுக்கு உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டேன். அதற்காக 10 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு கட்டு நாயக்க விமான நிலையத்தில் இருந்து பயணித்த விமானத்தில் பயணிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயணிக்கும் பகுதியூடாக நான் பயணித்த சமயம் விமான நிலைய அதிகாரிகள் பயங்கரவாதத் தடைப் பிரிவினரின் விசாரணை கோரப்பட்டுள்ளது. அதனால் உங்கள் கடவுச்சீட்டில் தடை உள்ளது எனத் தெரிவித்து வேண்டுமென்றே தடுத்தனர். இதன்போது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலையிட்டு கதைத்ததன் பெயரில் இறுதி நேரத்தில் பயணம் செய்ய அனும திக்கப்பட்டேன். இருந்தபோதும் 12ஆம் திகதி மாலை நாடு திரும்பியபோது எனது கடவுச்சீட்டில் தடை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அது என்ன தடை எனக் கோரியபோது எந்தவொரு தடையும் இல்லை எனப் பதிலளித்தனர்.

இதேநேரம் யாழ்ப்பாணத்தில் ஓர் ஊடக நிறுவனத்தின் நிகழ்ச்சியில் பங்கு கொண்டிருந்த பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கனடாவில் உள்ள தடை செய்யப்பட்ட அமைப்பின் அழைப்பின் பெயரில் சென்றதனால் அந்தத் தடை ஏற்படுத்தப்பட்டிருக்க லாம் என ஓர் பத்திரிகையில் செய்தி வெளியானது எனத் தெரிவித்திருந்தார். எனவே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரை விசாரித்தால் அது எந்தப் பத்திரிகை எனத் தெரியவரும். அந்த ஊடகத்தின் முதலாளியை விசாரிக்கும்போது இதன் உண்மைத் தன்மை கண்டறியப்படும்.

இதேநேரம் பாராளுமன்ற உறுப்பினரின் நண்பரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அஸ்மின் விமான நிலையத்தில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தடுக்கப்படவில்லை என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக முகநூலில் பதிவு செய்துவிட்டு தமிழ் நாடு அரசியல் கட்சி ஒன்றின் தலைவ ரான சீமானுடன் நான் நின்ற புகைப் படத்தையும் இணைத்துள்ளார்.

இதேநேரம் கடந்த இரு ஆண்டுகளாக எனது பாதுகாப்புப் பணியில் இருந்த ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் எந்தவொரு முன் அறிவித்தலும் இன்றி நீக்கப்பட்டுள்ளார். அது தொடர்பில் நான் பொலிஸ்மா அதிபரிடம் முறை யிட்டும் நடவடிக்கை இல்லை.

எனவே, இவை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு அதற்கு அரச பேச்சாளர் அல்லது புலனாய்வுப் பிரிவின் பேச்சாளர் போன்று ஊகத்தின் அடிப்படையில் என் தொடர்பில் கருத்துரைத்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாட்டை அழித்த ராஜபக்ஷக்கள் இனிமேல் மீண்டெழவே முடியாது!

## நாமல் கருணாரத்ன சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 22

**கொலைகளை, ஊழல், மோசடிகளைச் செய்து நாட்டை அழித்த ராஜபக்ஷக்கள் இனிமேல் மீண்டெழவே முடியாது என விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

ராஜபக்ஷக்கள் அரசியலில் இருந்து தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள்.

அவர்களின் மொட்டுக் கட்சியை மக்கள் அடியோடு சிதைத்து விட்டதோடு, குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இனிமேல் மீண்டெழ முடியாது.

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கு ஆசைப்பட்ட நாமல் ராஜபக்ச இறுதியில் தேசியப்பட்டியல் ஊடாகவே பாராளுமன்றம் வந்தார்.

அவர் இன்று வெட்கம் இல்லாமல் வீரவசனம் பேசுகின்றார். சீனாவுக்குச் சென்று வந்த ஜனாதிபதி அநுரகுமாரவை விமர்சிப்பதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

தனது தந்தை மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொலைகளை, ஊழல், மோசடிகளைச் செய்த நாமல் ராஜபக்ச இன்று நல்ல மனிதர் போல் வேடம் போட முயல்கின்றார்.

என்ன வேடம் போட்டாலும் ராஜபக்ஷ குடும்பத்தினரால் இனி மேல் மீண்டெழ முடியாது - என்றார். (அ)

# இலங்கை பிரஜை அந்தஸ்தை பெற்றது மியன்மார் குழந்தை!

முல்லைத்தீவு, ஜன. 22

மியன்மாரில் இருந்து இலங்கைக்கு தஞ்சம் கோரி வந்த கர்ப்பிணித் தாய் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குழந்தை பிரசவித்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பரப்பில் கடந்த டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி 115 பயணிகளுடன் மியன்மார் அகதிகள் படகு, கரை ஒதுங்கியிருந்தது.

பின்னர் கப்பல் கரைக்கு வர முடியாத நிலையில் கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை கடற்படை தளத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் திருகோணமலை ஜமாலிய முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு

பின்னர் 115 பேரும் முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படை தளம் ஒன்றில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த படகில் 45 சிறுவர்கள், 24 பெண்கள், 46 ஆண்கள் உள்ளடங்கலாக 115 பேர் தஞ்சம் கோரியிருந்தனர்.

அவர்களில் ஒரு கர்ப்பிணித் தாயும் அடங்குவார்.

குறித்த கர்ப்பிணித் தாய் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆண் குழந்தையை பிரசவித்துள்ளார். (அ)

# அஸ்வெசும திட்டம் குறித்து விரிவான மீளாய்வு ஆரம்பம்!

## சபையில் அறிவித்தது அரசு



கொழும்பு, ஜன. 22

'அஸ்வெசும' நலன்புரி திட்டத்தின் விரிவான மீளாய்வை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என நிதி மற் றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்னும் நிவாரணம் கிடைக்காத தகுதியுள்ள நபர்களை கண்டறிந்து அவர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிவாரண உதவி செயல்முறையை மேம்படுத்த, கணினி மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் மீண்டும் ஆய்வு செய்யப்படுகின்றன.

கணிசமான எண்ணிக்கையிலான மக்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளன, அவை முறையான நடைமுறைகளைப் பின்பற்றி முழுமையாக மதிப்பாய்வு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

2024 ஆம் ஆண்டைவிட 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நலன்புரி நலன்களுக்காக ஒரு பெரிய ஒதுக்கீட்டை ஒதுக்குவதற்கான திட்டங்களையும் சூரியப்பெரும இதன்போது வெளிப்படுத்தினார்.

தற்போதைய அமைப்பில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும் தேவைப்படுபவர்களுக்கு ஆதரவை வழங்குவதற்கும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் அவர் வலியுறுத்தினார். (அ)

# பொதுக்கூட்டணி ஒன்றை அமைக்க சஜித் அணியினர்-ஐ.தே.க. இணக்கம்!

கொழும்பு, ஜன. 22

பொதுக்கூட்டணியை அமைத்து அடுத்துவரும் தேர்தல்களை முகம் கொடுக்க ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணங்கியுள்ளன. இது தொடர்பாக இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் இரவு கலந்துரையாடினர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியில் இணையவேண்டும் என்ற யோசனை ஐக்கிய தேசிய கட்சியால் முன்வைக்கப்பட்டது.

இதனை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்தது.

இந்தநிலையில் இரண்டு கட்சிகளும் இணைந்து பொதுக்கூட்டணி ஒன்றை அமைக்க இணக்கம் காணப்பட்டது.

இது தொடர்பான மேலதிக கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரூபா 76,000 விற்ற புற்றுநோய் தடுப்பூசி தற்போது 370 ரூபாவாக விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 22

ஒரு காலத்தில் ரூ.76,000க்கு விற்கப்பட்ட புற்றுநோய் தடுப்பு மருந்து தற்போது ரூ.370 ஆக குறைக்கப்பட்டுள்ளது என, வைத்தியத் துறை வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

ஆதாரங்களின்படி, 2018 ஆம் ஆண்டில், குறித்த தடுப்பு மருந்தின் அதிகபட்ச சில்லறை விலை ரூ.76,000 ஆக இருந்தது, பின்னர் அது கடந்த ஆண்டு 54,000 ரூபாயாக குறைக்கப்பட்டது.

புதிய அரசாங்கத்தின் கீழ், மூன்று புதிய விநியோகத்தர்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஒரே நிறுவனம் முன்பு வைத்திருந்த ஏகபோகத்தை முடிவுக்கு கொண்டு வந்த பிறகு, விலை ரூ.370 ஆக குறைந்தது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி கருத்து வெளியிடுகையில், சுகாதார அமைச்சினால் மாதந்தோறும் பல பில்லியன் ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துப்பொருட்கள் அழிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்துகள் அகற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக புத்தளம் சிமெந்து தொழிற்சாலைக்கு எரிப்பதற்காக அனுப்பப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார். (அ)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை வகிப்பதற்கு தயார்!

## தயாசிறி ஜயசேகர அறிவிப்பு

கொழும்பு, ஜன. 22

வீழ்ந்து காணப்படும் சுதந்திரக் கட்சியை மக்களால் நிராகரிக்கப்பட்டு அந்நியப்படுத்தப்பட்ட ஒருவரால் அல்ல, புதிய தலைமை ஒருவரால் மாத்திரமே மீள கட்டியெழுப்ப முடியும் எனவும் புதிய தலைமைத்துவம் அவசியமெனில் அதற்கு தான் தயார் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக் கட்சியில் தற்போது பதவி வகிக்கும் தவிசாளர் மற்றும் செயலாளர் சட்டரீதியாக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களும் நீதிமன்றத்தினூடாக எந்தவொரு சட்ட ரீதியான அதிகாரமும் கிடைக்கவில்லை.

இன்னுமும் சுதந்திரக் கட்சி தேர்தல்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படவில்லை. அதனால் சுதந்திரக் கட்சி மேற்கொள்ளும் தீர்மானங்கள் அனைத்தும் சட்டவிரோதமானவை.

அவர்கள் தற்போது கதிரைச் சின்னத்தை பயன்படுத்தி அதன் மூலம் ஏதாவது ஒரு செயலைச் செய்ய முயற்சிக்கிறார்கள். அதுவும் சட்டவிரோதமானது. அதிலும் பெரிய பிரச்னைகள் காணப்படுகின்றன. கதிரைச் சின்னணி மக்கள் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்ட போது எழுந்த நெருக்கடிகள் பல உள்ளன. நாங்கள் அது தொடர்பில் எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

சுதந்திரக் கட்சியின் செயலாளராக இரண்டு முறை நீதிமன்றத்தால் எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும், ஒரு குழுவினர் தேவையற்ற பலத்தைப் பயன்படுத்தி என்னை உள்ளே அனுமதிக்கவில்லை.

நிமல் சிறிபால டி சில்வா மற்றும் துமிந்த திசாநாயக்க இருவரும் தவறாக நியமிக்கப்பட்டதாகக் கூறி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளோம்.

கட்சியின் செயலாளராக சட்டபூர்வமாகப் பொறுப்புகளை ஏற்க அனுமதிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தேன்.

அந்த தீர்மானம் எடுக்கப்பட்ட பிறகு, இலங்கை முழுவதும் சென்று, கட்சியை முன்னோக்கி எடுத்துச் செல்ல சரியான கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாட நாங்கள் தயாராக உள்ளோம். தீர்ப்பு வேறு விதமாக வந்தால், அதை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன் - என்றார். (அ)

# தேசிய மக்கள் சக்தி எம்.பிக்களின் கொடுப்பனவு ஒரே வங்கிக்கணக்கில்!

கொழும்பு, ஜன. 22

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் அனைத்து கொடுப்பனவுகளும் ஒரே வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நிஹால் கலப்பதியுடன் ஆரம்பமான பயணத்தை தாங்கள் தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கட்சியின் நிதி பொரளையிலுள்ள மக்கள் வங்கியின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னர், குறித்த பணம் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை மக்களுக்கு அதிகபடியான சேவைகளை வழங்குவதற்கு வாய்ப்பளிக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org